[1971 ஜூலை 24

[பேரவைத் தலைவர்]

நான் கண்டிருக்கிறேன். அவர்கள் இரண்டரை ஆண்டுக் காலமாக பொறுப்பேற்றுக் கொண்டு அதனை ஒரு நல்ல வாய்ப்பாகக் கருதி மக்களுக்கு, கோடிக் கணக்கான மக்களுக்கு நன்மைகள் செய்கின்ற பணியிலே ஈடுபட்டிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட தலைசிறந்த அந்தத் தலைவருக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் "டாக்டர்" என்ற பட்டம் வழங்கியிருக்கிறது.

கடந்த தேர்தலிலே தமிழ்நாட்டு மக்கள் பெரிய நம்பிக்கை வைத்து அவர்களுடைய இதய ஒலி, அபிலாஷைகள் ஆகியவற்றின் சின்னமாகவும் வெற்றியுடன் அவர்கள் வெளிவந்தார்கள். இன்றைக்கு ஒரு பெரிய சமதர்ம சமுதாயம் அமைக்கின்ற காரியத்திற்கும் பொருளாதாரப் புரட்சிக்கும் சமூகப் புரட்சிக்கும் தன்னை ஒரு கருவியாக ஏற்றுச் செயல்படுகின்ற அவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் இன்னும் வளருகின்ற வகையில் நல்வாழ்த்துக்களை பேரவையின் எல்லாப் பகுதியிலும் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் சார்பிலேயும் தெரிவித்துக்கொண்டு அவர்கள் பல ஆண்டுக்காலம் நீடுழி வாழ இன்னும் நல்ல ஆற்றல்களையும் பல வெற்றிகளையும் பெற்று இந்த நாட்டு மக்களை முன்னேற்ற வேண்டுமென்ற முறையிலே என்னுடைய இதயங்கனிந்த பாராட்டுதல்களையும் தெரிவித்து மன்றத்தின் உறுப்பினர்களின் சார்பிலே தெரிவித்துக்கொள்கின்ற முறையிலே அவர்கள் கரவொலிசெய்து ஆமோதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (கரவொலிகள்).

(3) அறிவிப்புகள்

(அ) கவன ஈர்ப்புகாரியம் ஒற்றிவைக்கப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப் பேரவை விதி 41-ன் கீழ் திரு. கு. காமாட்சி அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு பொதுமுக்கியமான காரியமொன்றைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அது ஒற்றிவைக்கப்படுகிறது.

(4) கவன ஈர்ப்பு

தென்னை, வாழை மரங்கள் தொத்து நோய்களால் பாதிக்கப் பட்டது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. ஏ. எம். இராஜா அவர்கள் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு அவசரப் பொதுமுக்கியமான காரியத்தைக் கொண்டுவருவார்கள்.

1971 ஜூலை 24]

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, இம்மாநிலம் முழுவதிலும் தென்னை மரங்களும், வாழை மரங்களும் சில தொத்து நோய்களால் பாதிக்கப்படுவதைப் பற்றியும், இந்நோய்களைத் தடுக்க அவசியமான நடவடிக்கைகளை எடுப்பது பற்றியுமான அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, தென்னை வாழை பயிர்கள் சாகுபடியாகும் நிலப்பரப்பு முறையே, 1,96,600 ஏக்கராக்கள், 1,20,125 ஏக்கராக்கள் ஆகும். இப்பயிர்கள் கீழே குறிப்பிட்டுள்ள பூச்சிகளாலும், நோய்களாலும் பாதிக்கப் பட்டுள்ளன :—

தென்னை.

பூச்சிகள்—

1. தென்னை சிவப்புவண்டு.
2. தென் கருவண்டு.
3. நெப்பாண்டிக்ஸ் செரிநோப்பா.
4. வெள்ளை எறும்புகள்.

நோய்கள்—

1. தென்னை வாடல் நோய்.
2. சாறுவடிதல் நோய்.
3. பட்ரூட் நோய்.
4. இலைப்புள்ளி நோய்.

வாழை.

பூச்சிகள்—

1. இறக்கை வண்டு.
2. ரிஸோன்வீவில்.

நோய்கள்—

1. முடிகொத்து நோய்.
2. இலைப்புள்ளி நோய்.
3. வாழைவாடல் நோய்.

பொதுவாக பூச்சிகளாலும், நோய்களாலும் பாதிக்கப்பட்டுள்ள பரப்பளவும், அப்பூச்சிகளையும் நோய்களையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்ட பரப்பளவும் பின்வருமாறு:—

தென்னை.

தொ. எண்.	மாவட்டத்தின் பெயர்.	பூச்சிகளாலும், நோய்களாலும், பாதிக்கப்பட்டுள்ள மொத்த பரப்பளவு. (ஏக்கர்கள்)	பூச்சிகளையும், நோய்களையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்ட மொத்த பரப்பளவு. (ஏக்கர்கள்)
1.	செங்கை	1,650	1,210
2.	வட ஆற்காடு	3,200	2,625
3.	தென் ஆற்காடு	2 200	1,500
4.	தஞ்சாவூர்	16,000	12,000
5.	திருச்சி	4 500	2,700
6.	சேலம்	3,500	2,150
7.	தருமபுரி	3,100	2,100
8.	கோயமுத்தூர்	5,200	4,100
9.	மதுரை	4,200	2,650
10.	இராமநாதபுரம்	5,200	2 650
11.	திருநெல்வேலி	5,100	2,750
12.	கன்னியாகுமரி	5 900	4,500
	மொத்தம் ..	59,750	40,935

வாழை

தொ. எண்.	மாவட்டத்தின் பெயர்.	பூச்சிகளாலும், நோய்களாலும் பாதிக்கப்பட்டுள்ள மொத்த பரப்பளவு. (ஏக்கர்கள்)	பூச்சிகளையும், நோய்களையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள மொத்த பரப்பளவு. (ஏக்கர்கள்)
1.	செங்கை	550	375
2.	தென்ஆற்காடு	100	100
3.	வடஆற்காடு	500	400
4.	சேலம்	254	217
5.	கோயம்புத்தூர்	2,250	1,937
6.	திருச்சிராப்பள்ளி	5,000	4,250
7.	மதுரை	1,250	937
8.	திருநெல்வேலி	300	200
9.	தஞ்சாவூர்	2,500	2,250
	மொத்தம் .	12,704	10,666

1971 ஜூலை 24] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

மேலே குறிப்பிட்டுள்ள விபரங்களிலிருந்து பூச்சிகளினுலும், நோய்களினுலும், பாதிக்கப்பட்ட தென்னையில் 59,750 ஏக்கரா பரப்பளவில் 40,935 ஏக்கராக்களும், வாழையில் 12,704 ஏக்கரா பரப்பளவில் 10,666 ஏக்கராக்களிலும் தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதை அறியலாம். மீதிப்பகுதிகளில் தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வேளாண்மைத்துறை அலுவலர்கள் விவசாயிகளோடு தொடர்புகொண்டு இந்த தொத்து நோய்களை கட்டுப்படுத்த எந்த அளவுக்கு பூச்சிகொல்லி மருந்துகளையும் பூசண மருந்துகளையும் பயன்படுத்த வேண்டும் என்பது பற்றி ஆலோசனை கூறி தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறுர்கள். பூச்சிகளாலும், நோய்களாலும் பாதிக்கப்படுவதை தடுக்க சுமார் 2,31,119 கிலோகிராம் அளவுள்ள பூச்சிகொல்லி மருந்துகளும், பூசண மருந்துகளும் பயன்படுத்தப்பட்டுள்ளது. வேளாண்மை கிடங்குகள் மூலம் அநேகவிதமான பூச்சிகொல்லி மருந்துகளும், பூசணமருந்துகளும், விலையில் 15 சதவிகிதம் குறைத்து கொடுக்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்கள் தூவான்களையும், தெளிப்பான்களையும் 25 சதவிகித சகாய விலைக்கு கொடுக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் விவசாயிகளுக்குக் குறைந்த வாடகையில் போதுமான அளவு தெளிப்பான்களும், தூவான்களும் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவைகளை விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டு வருகிறுர்கள். மொத்தம் 76,059 தூவான்களும் தெளிப்பான்களும் உள்ளன. தேவையான பொழுது, தூவான்கள் முதலியனவைகளைப் பயன்படுத்துவதுபற்றியும் விளக்கிக் காட்டப்படுகிறது

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்தத் தூவான்கள், தெளிப்பான்கள் எல்லாம் ஒரே கன்ஃப்யூஷனுக இருக்கிறது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜா அவர்கள் கோவை மாவட்டத்தைப்பற்றிக் கேட்பதற்காக இதைக் கேட்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நானும், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரவர்களும் 28-ஆம் தேதி சென்றிருந்த பொழுது பொள்ளாச்சியிலிருந்து சில விவசாயிகள் இப்படிப்பட்ட நோய் பரவுவதைப்பற்றிச் சொன்னுர்கள். நான் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து நடவடிக்கை எடுக்கச் சொல்லி, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே இதுபோல பூச்சிகளால் பாதிக்கப்படும் நேரத்தில் உடனுக்குடன் விவசாயத் துறை அலுவலர்களால் உடனுக்குடன் அதற்கு வேண்டிய தக்க யோசனைகளும், தக்க ஏற்பாடும் செய்யப்பட்டு வருவதால் இதற்கு அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, இந்தத் தென்னை மரத்திற்கு புள்ளிவரும் நோய்கள் புழுக்களால் ஏற்படுகிறது. அதை மற்ருெரு புழுக்களைவிட்டுத்தான் சாகடிக்க வேண்டியிருக்கிறது. அந்தப் புழுக்களை வளர்க்க ஃப்ரீடிங் சென்டர்களை ஒவ்வொரு டிவிஷனிலும் ஏற்படுத்த அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, பல்வேறு நோய்கள் பரவுகின்றன. அதற்குப் பல்வேறு மருந்துகள் தெளிக்கப்படுகின்றது. நெப்பாண்டிக்ஸ் செரிநோப்பா என்று இருக்கின்றன. தடுக்க பாரசை என்ற தடுப்பு பூச்சிகளை விட்டுத் தடுக்கும் முறையிருக்கிறது. அதை அதிகமாக ஆராய்ச்சி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

MR. SPEAKER : Now Government Bills.

(5) நடைமுறைக் கேள்வி

ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானத்தை அவையில் எடுத்துக் கொள்வது பற்றி.

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். ஒற்றி வைப்புத் தீர்மானம் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிக் கொடுத்திருக்கிறோம். அதை இப்பொழுது எடுத்துக் கொள்கிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றி வைப்புத் தீர்மானங்கள் நாளையதினம் எடுத்துக் கொள்ளப்படும். ஒற்றி வைப்புத் தீர்மானத்திற்காக இப்படிப்பட்ட ஒழுங்குப் பிரச்னை என்று எழுப்புவது முறையல்ல. அதை சபாநாயகர் அறையிலேயே தள்ளிவிடலாம், இங்கேயும் தள்ளிவிடலாம், அதற்கான காரணங்களைச் சொல்லலாம். ஆனால் அதைக் கொண்டுவந்து சபையிலே எழுப்புவது முறையானது அல்ல என்பதைமட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(6) அரசினர் சட்டமுன்வடிவுகள்

(அ) 1971-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிகால நீட்டிப்பு) சட்டமுன்வடிவு

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 1971-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிகால நீட்டிப்பு) சட்டமுன்வடிவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இச் சட்டமுன்வடிவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன் வடிவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.